26.6.2025

**ஊடக வெளியீடு 2:** PBA Holdings Bhd (PBAHB)– 25**ஆம் ஆண்டு பொதுக்குழு கூட்டம்**

**DATO' IR. PATHMANATHAN K.,**
CEO, PBAHB and PBAPP.

**PBAPP இன் 2024 KPI மதிப்பீடு: தேசிய சராசரியை விட கூடுதலாகும்**

**பினாங்கு, வியாழக்கிழமை,** 26.6.2025: பினாங்கின் நீர் விநியோக வாரியமாக பணியாற்றுவதில் 2024 ஆம் ஆண்டிற்கான PBAPP இன் முக்கிய செயல்திறன் மதிப்பீடு (KPIs) தேசிய நீர் சேவைகள் ஆணையம் (SPAN) அறிவித்த தேசிய சராசரிகளுடன் தொடர்ந்து சாதகமாக ஒப்பிடுகின்றன:

| மதிப்பீடுகள்(KPIs) | | PBAPP 2024 | தேசிய சராசரி2023* |
|---|---|---|---|
| 1. | **நகரப் பகுதிகளுக்கான குடிநீர் விநியோக சேவை** | 100.0% | 97.1% |
| 2. | புறநகர்ப் **பகுதிகளுக்கான குடிநீர் சேவை** | 99.8% | 97.1% |
| 3. | **சுத்திகரிக்கப்பட்ட நீர் உற்பத்தி** | 1,208 MLD | 1,320 MLD |
| 4. | **கட்டணம் விதிக்கப்பட்ட நீர்** பயன்பாடு | 870 MLD | 869 MLD |
| 5. | **வருமானமில்லா நீர்** (NRW) | 28.0% | 34.6% |
| 6. | **சுத்திகரிக்கப்பட்ட நீரின் கையிருப்பு** | 30.0% | 15.3% |
| 7. | **சுத்திகரிக்கப்பட்ட நீரின் தரநிலை** | **தர உறுதி திட்டம், சுகாதார அமைச்சு** | n.a. |
| 8. | **நீர் விநியோக பாதிப்புகள்:** மொத்த நீர் கணக்குகளில் வாடிக்கையாளர் புகார்களின் சதவிகிதம் | 0.9%** | 3.2% |
| 9. | குழாய்கள் வெடித்தல்: மொத்த நீர் கணக்குகளில் பெற்ற புகார்களின் சதவிகிதம் | 5.9%** | 7.2% |

| | | | |
|---|---|---|---|
| 10. | **நீர்க் கட்டணம் மற்றும் மீட்டர் தொடர்பான பிரச்சனைகள்: மொத்த நீர் கணக்குகளில் இவற்றிற்கான புகார்களின் சதவிகிதம்** | 2.8%** | 4.3% |
| 11. | **வாடிக்கையாளர் புகார்கள் எண்ணிக்கை:**<br>**நீர் தரம் தொடர்பான புகார்கள்** | 393** | 893 |
| *SPAN **நீர் மற்றும் கழிவுநீர் தகவல் புத்தகம்** 2023<br>**2023 **ஆம் ஆண்டுக்கான** PBAPP **புள்ளிவிவரங்கள்** | | | |

பினாங்கில் PBAPP தொடர்ந்து சிறந்த நீர் விநியோக சேவைகளை வழங்கி வருவதாக KPI காட்டுகின்றன. ஆயினும் அதன் வாடிக்கையாளர் எண்ணிக்கை ஒரு வருடத்திற்கு 15,742 பயனீட்டாளராக அதிகரித்துள்ளது.

| கூடுதல் பினாங்கு நீர் விநியோக தரவு | | 2024 | 2023 | அதிகரிப்பு/ (குறைப்பு) |
|---|---|---|---|---|
| 12. | மக்கள் தொகை | 1,800,400 | 1,771,600 | 28,800<br>1.6% |
| 13 | பதிவுசெய்யப்பட்ட உள்நாட்டு பயனீட்டாளர்களின் எண்ணிக்கை | 604,976 | 593,255 | 11,721<br>2.0% |
| 14. | பதிவுசெய்யப்பட்ட உள்நாட்டு பயனீட்டாளர்கள் அல்லாதவர்களின் எண்ணிக்கை | 100,552 | 96,531 | 4,021<br>4.2% |

PBA HB
PBA Holdings Bhd
200001012513 (515119-U)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

| | | | | |
|---|---|---|---|---|
| 15. | மொத்த பயனீட்டாளர்களின் எண்ணிக்கை | 705,528 | 689,786 | 15,742<br>2.3% |
| 16 | தனிநபர் உள்நாட்டு பயன்பாடு | 261 LCD | 284 LCD | (23 LCD)<br>(8.1%) |

இருப்பினும், இன்று நடைபெற்ற 25வது PBA ஹோல்டிங்ஸ் பெர்ஹாட் ஆண்டு பொதுக் கூட்டத்தில் (AGM) பினாங்கு முதலமைச்சர் மேதகு சாவ் கொன் இயோவ் கூறியது போல், முன்னோக்கிச் செல்வதற்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன.

2025 ஆம் ஆண்டிலும் பினாங்கு நீர் பற்றாக்குறையை எதிர்நோக்கும் மாநிலமாகவே உள்ளது. பினாங்கில் 100% நகர்ப்புற மற்றும் 99.8% புறநகர் நீர் விநியோகத்தை நிலைநிறுத்த PBAPP பாடுபடும், அதே நேரத்தில் NRW சதவீதத்தையும் குறைக்கும். 2030 க்கு முன்னதாக கூடுதலான நீரை விநியோகிப்பதற்காக நீர் தற்செயல் திட்டம் 2030 (WCP 2030) உள்ளிட்ட நீர் விநியோக திட்டங்களை நாங்கள் தொடர்ந்து செயல்படுத்த விரைந்து செயல்படுவோம். மேலும், பருவநிலை மாற்றம் மற்றும் எந்த நேரத்திலும் ஏற்படக்கூடிய "சுங்கை மூடா சம்பவங்கள்" தொடர்பான பினாங்கின் நீர் அபாயங்களை மேலும் குறைப்பதற்கான திட்டங்களுக்காக நாங்கள் பணியாற்றி வருகிறோம்.

நன்றி.

—-------------------------------------------------------------------------------------------------------------

எழுத்தாக்கம் :Syarifah Nasywa bt Syed Feisal Barakbah
Corporate Communications Unit
மின்னஞ்சல் : syarifah@pba.com.my